FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029117

1. District மாவட்டம் : திருநெல்வேலி / PS: காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருநெல்வேலி Year: ஆண்டு FIR No.: மு.த.அ. எண் 1/2018 Date: நாள் 13/02/18

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Sec. 7 and 13(2) r/w
(iii) Act சட்டம்: P.C. Act 1988 Sections பிரிவுகள்: 13(1)(d) of PC Act, 1988.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 12/02/18 — Date to : நாள் வரை 12/02/18
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 1800 மணி — Time to : நேரம் வரை 22.30 மணி
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13/02/18 — Time : நேரம் 1500 மணி
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் பொநாகுறி -I பக்கம் — Time : நேரம் 13/02/18 1500 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தட்டச்சு மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 50 கி.மீ. வடகிழக்கு.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம் போலீஸ் ரோடு, சேந்தப்பட்டி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. S. ஜோதி
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் —
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு —
(d) Nationality : நாட்டினம் இந்தியர்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்
(g) Address : முகவரி இணை இயக்குநர் அலுவலர், வேளாண் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வேலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. ஆர். ரமேஷ்குமார், சார்பதிவாளர் நிலை-2 த/பெ ராமச்சந்திரன்,
2. திரு. பழனி த/பெ சேவகன், உதவியாளர்,
3. திரு. மதுசூதனன் த/பெ சுப்பிரமணியன் (வடசெட்) இளநிலை உதவியாளர் இணைவகம் சார்பதிவாளர் அலுவலகம் சேந்தப்பட்ட திருநெல்வேலி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

* GCP 240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ……………………. Rank ……………………. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………… பதவி ……………………. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 13/2/18

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 13/2/18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 13.02.2018 17.00 Hrs

Name: பெயர் V.SARAVANAKUMAR
Rank: நிலை DSP No எண் ……….
VKAC / Tiruvannamalai

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

இன்று 13.02.2018ம் தேதி பகல் 1500 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்த போது S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை என்பவர் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர், S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை. பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை.நாள்: 13.02.2018, பொருள்: திடீர் ஆய்வு சோதனை - இரா.ரமேஷ்குமார், சார்பதிவாளர் நிலை-2, சேத்பட், திருவண்ணாமலை மாவட்டம் - அலுவலக சோதனை - கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணம் - ஒப்படைப்பு - நடவடிக்கை வேண்டி கோருதல் சம்மந்தமாக. 12.02.2018ம் தேதி மாலை 17.30 மணிக்கு, திருவண்ணாமலை மாவட்டம், சேத்பட் பேரூராட்சி, சேத்பட்-போளூர் செல்லும் சாலையில் அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம், பிற பதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் பெற வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் தனித்தனியாக பதிவு செய்யப்படும் பத்திர மதிப்புகளுக்கு ஏற்பவும் அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைதரகர்கள் (புரோக்கர்கள்) மூலமும் கையூட்டு பெறுவதாக கிடைக்க பெற்ற நம்பகமான தகவலின் பேரில் எனது தலைமையில் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் இணைந்து சேத்பட் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ள சென்று கண்காணிக்கப்பட்டது. பின்னர் 18.00 மணியளவில் நான் மற்றும் ஊழல் தடுப்பு மற்றம் கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர் மற்றும் அலுவலர்களுடன் சென்று சேத்பட் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனையை ஆரம்பிப்பதற்கு முன்பு சார்பதிவாளர் திரு. ரமேஷ்குமார் மற்றும் ஆஜரில் இருந்த அலுவலர்கள் முன்பாக சோதனைக்கு வந்த அலுவலர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும் தங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டு தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காட்டப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது 1. திரு. ரமேஷ்குமார், சார் பதிவாளர் நிலை-2, 2.திரு.S.பழனி (53/18), உதவியாளர், 3.திரு.மதுசூதனன் (25/18), இளநிலை உதவியாளர், 4.திரு.விஜயன் (36/18), தகவல் தொகுப்பு பணியாளர், 5.செல்வி.R.மகாலட்சுமி (25/18), தனிநபர் கணினியில் தட்டச்சு செய்து கொண்டிருந்தவர், 6.திரு.R. வினோத் ராஜ் (28/18), த/பெ. ராஜேந்திரன், எண்.33, கடை தெரு, சேத்பட் (செல்போன் எண்.96006 96892) மற்றும் அவரது தாயார் திருமதி. ராணி (45/18) ஆகியோர் சார்பதிவாளர் அலுவலகத்தினுள் இருந்தார்கள். அதன் பின்னர் நான் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் சார்பதிவாளர் திரு.ரமேஷ்குமார் (49/18), த/பெ. ராமசந்திரன் அவர்களின் மேஜையை சோதனை செய்ய அவர் மேஜையின் இடதுபக்க டிராயரில் சிவப்பு நிற பிளாஸ்டிக் டப்பாவில் பணம் ஒழுங்கற்ற முறையில் மடித்து வைக்கப்பட்டுள்ளது. அவற்றை

எடுத்து எண்ணிப் பார்க்க அதில் பணம் ரூ.4,633/- இருந்தது. மேற்படி பணம் தொடர்பாக சார்பதிவாளரை விசாரணை செய்ய அவர், இன்று 12.02.2018-ந் தேதி மொத்தம் 19 ஆவணங்கள் ஆப் லைனில் பதிவு செய்யப்பட்டதாகவும், அதை 'அ' கணக்கு பதிவேட்டில் 1 புத்தக ஆவணம் 328 முதல் 344 வரை 17 ஆவணங்களும், 3 புத்தகம் ஆவணம் உயில் ஒன்று (எண்.5/2018) மற்றும் 4 புத்தக ஆவணம் எண்.5/2018 ஒன்று (உறுதி மொழி ஆவணம்) ஆக மொத்த ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டது 19 எனவும், இதில் வங்கி வரைவோலை (DD) ஆக ரூ.96,315/- மற்றும் வசூல் செய்யப்பட்ட பணம் ரூ.2,655/- என்றும் கூறினார். எனவே, இது தொடர்பாக மேற்படி 'அ' கணக்கு பதிவேட்டில் சரிபார்க்க அவை அவர் கூறியவாறு மேற்சொன்ன வரைவோலையும் மற்றும் வசூல் செய்த பணமும் சரியாக இருந்ததால் அவற்றை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இன்று 12.02.2018-ந் தேதி காலை 10.00 மணிக்கு தனி நபர் பண இருப்பு பதிவேட்டில் திரு.ரமேஷ்குமார், சார்பதிவாளர் அவர் தனது இருப்பாக ரூ.600/- என்று இருந்தது. ஆனால் தற்போது அவரிடம் பணம் ரூ.1,378/- அதிகமாக இருந்தது. மீதம் அதிகமாக இருந்த பணம் ரூ.1,378/-ஐ பற்றி அவரிடம் கணக்கு கேட்க சார்பதிவாளரால் அப்பணத்திற்கான சரியான முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே, அப்பணம் ரூ.1,378/-ஐ விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், 'அ' பதிவேட்டை பார்வையிட அதில் காவல் துணை கண்காணிப்பாளர், துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சார்பதிவாளர் ஆகியோர் கையொப்பம் செய்து, பதிவேட்டின் நகலை விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் நான் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் உதவியாளர் திரு.பழனி (53/18), த/பெ. சரவணன் அவர்களின் மேஜை மற்றும் நாற்காலிகளை சோதனை செய்ய அவர் மேஜையில் இடதுபக்க நோட்புக்கிற்கு அடியில் பணம் ஒழுங்கற்ற முறையில் மடித்து வைக்கப்பட்டிருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப் பார்க்க அதில் பணம் ரூ.6,090/- இருந்தது. மேற்படி உதவியாளர் திரு.பழனியிடம் விசாரணை செய்ய அவர், இன்று 12.02.2018-ந் தேதி தேடுதல் கட்டணம் நகல் கட்டணம் (D Account) பணம் ரூ.2,659/- வசூல் செய்ததாகவும் மற்றும் பிறப்பு இறப்பு நகல் கொடுக்க வசூல் செய்யப்பட்ட பணம் ரூ.2400/- ஆக மொத்தம் ரூ.5059/-. அதை சம்மந்தப்பட்ட D பதிவேடு மற்றும் பிறப்பு இறப்பு பதிவேட்டில் பார்வையிட சரியாக இருந்தது. அதனால் பணம் ரூ.5,059/- மற்றும் இன்று 12.02.2018-ந் தேதி காலை 10.00 மணிக்கு தனி நபர் பண இருப்பு பதிவேட்டில் திரு.பழநி, உதவியாளர், அவர் தனது இருப்பாக ரூ.200/- என்று இருந்தது. ஆனால் தற்போது அவரிடம் பணம் ரூ.831/- அதிகமாக இருந்தது. இப்பணம் ரூ.831/-ஐ பற்றி அவரிடம் கணக்கு கேட்க உதவியாளர் திரு.பழனியால் அப்பணத்திற்கான சரியான முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே, அப்பணம் ரூ.831/-ஐ விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், 'D' பதிவேடு மற்றும் பிறப்பு இறப்பு பதிவேடுகளில் காவல் துணை கண்காணிப்பாளர், துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சார்பதிவாளர் ஆகியோர் கையொப்பம் செய்தனர். அதன் நகல் விசாரணை நிமித்தம் பெறப்பட்டது. பின்னர் நான் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் இளநிலை உதவியாளர் திரு.மதுசூதனன் (25/18), த/பெ. சுப்ரமணியன் (லேட்) அவர்களின் மேஜை மற்றும் நாற்காலிகளை சோதனை

செய்ய அவர் மேஜையின் மீது இருந்த ஒரு பதிவேட்டில் பணம் வைக்கப்பட்டிருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப் பார்க்க அதில் பணம் ரூ.1,860/- இருந்தது. மேற்படி இளநிலை உதவியாளர் திரு.மதுசூதனனிடம் விசாரணை செய்ய அவர் தான் பணம் வசூல் செய்வது என்னுடைய பணி இல்லை என்று கூறினார். ஆனால் இன்று 12.02.2018-ந் தேதி காலை 10.00 மணிக்கு தனி நபர் பண இருப்பு பதிவேட்டில் திரு.மதுசூதனன், இளநிலை உதவியாளர், அவர் தனது இருப்பாக ரூ.450/- என்று இருந்தது. ஆனால் தற்போது அவரிடம் பணம் ரூ.1,410/- அதிகமாக இருந்தது. இப்பணம் ரூ.1,410/-ஐ பற்றி அவரிடம் கணக்கு கேட்க இளநிலை உதவியாளர் திரு.மதுசூதனனால் அப்பணத்திற்கான சரியான முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே, அப்பணம் ரூ.1,410/-ஐ விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதன் பின்னர் கணினி அறையில் இருந்த தகவல் தொகுப்பு பணியாளர் திரு.விஜயன் (36/18), த/பெ. ஆறுமுகம் என்பவரை விசாரணை செய்ய அவர் கடந்த 5 வருடங்களாக தற்காலிக கேமரா ஆப்ரேட்டராக பணி செய்து வந்ததகாவும், கடந்த ஒன்றரை மாதமாக தகவல் தொகுப்பு பணியாளராக தினக்கூலி அடிப்படையில் ரூ.200/-க்கு பணிபுரிவதாகவும் கூறினார். அவரை சோதனையிட அவரது பேண்ட் பாக்கெட்டில் பணம் ரூ.100/- இருந்தது. அவர் உட்கார்ந்திருந்த கணினி மேஜை அருகே இருந்த ஆவணங்களில் பணம் ரூ.630/- ஒழுங்கற்ற முறையில் இருந்தது. மேற்படி பணத்தை பற்றி அவரிடம் கணக்கு கேட்க திரு.விஜயன் பேண்ட் பாக்கெட்டிலிருந்த ரூ.100/-க்கு மட்டும் சரியான விளக்கம் கூறினார். ஆனால் ஆவணங்களில் இருந்த பணம் ரூ.630/-க்கான சரியான முகாந்திரம் கூற இயலவில்லை. எனவே, அப்பணம் ரூ.630/-ஐ விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர் கணினி அறையில் தட்டச்சு செய்து கொண்டிருந்த செல்வி.R.மகாலட்சுமி (25/18) த/பெ. ராஜீ, அரச மரத்தெரு, எயில் கிராமம், மலையனூர் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் என்பவரை விசாரணை செய்ய அவர் தான் இன்று 12.02.2018-ந் தேதி முதல்தான் டைப் செய்து வருவதாக கூறினார். வேலைக்கு ஏற்றவாறு கூலி தருவதாக சார்பதிவாளர் கூறியதாக கூறினார். அவரை வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.S.விஜயலட்சுமி சோதனையிட அவரிடம் பணம் ஏதும் இல்லை. பின்னர் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்த தனிநபர்கள் இருவரை சோதனையிட அவர்கள் இருவரிடமும் பணம் எதுவும் இல்லை. அதன் பின்னர் கணிணி அறையில் இருந்த இரும்பு பீரோவில் காக்கி நிற கவரில் இருந்த பணம் ரூ.13,000/-ஐ பற்றி சார்பதிவாளரிடம் கேட்க அவர் அப்பணம் கொடிநாள் வசூலுக்கான தொகை என்று கூறினார். மேலும், அதற்குண்டான கொடிநாள் வசூல் அடிகட்டை (Counter foil) இரண்டு மற்றும் 'H' கணக்கு பதிவேடு மற்றும் 'C' கணக்கு பதிவேடு ஆகியவற்றை பார்க்க அது சரியாக இருந்தது. மேலும் பீரோவிலிருந்த பணம் ரூ.250/- பற்றி கேட்க சார்பதிவாளர் அப்பணம் நிரந்தர முன்பணம் என்று சொன்னதால், மேற்படி பணம் கைப்பற்றப்படவில்லை. பின்னர் 1.தனிநபர் இருப்பு பதிவேடு 2. வருகை பதிவேடு, 3. A கணக்கு பதிவேடு, 4.பிறப்பு இறப்பு கட்டண பதிவேடு, 5.H கணக்கு பதிவேடு, 6. C கணக்கு பதிவேடு மற்றும் 7.D கணக்கு பதிவேடு ஆகியவற்றில் நான், திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.V.சரவணகுமார் மற்றும் சார்பதிவாளர் திரு.ரமேஷ்குமார் ஆகியோர்

கையொப்பம் செய்து அசல் தனிநபர் இருப்பு பதிவேட்டையும் மற்ற பதிவேடுகளின் நகல்களையும் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும் தகுந்த முகாந்திரம் சொல்லப்படாத மற்றும் அலுவலக கணக்கில் வராத பணம் ரூ.4,249/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டுச்சோதனை 12.02.2018 இரவு 22.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த செயல்முறையின் நகல் சார்பதிவாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மேற்சொன்ன திடீர் ஆய்வு சோதனையின் போது சார்பதிவாளர் திரு.இரா.ரமேஷ்குமார் அவரிடமிருந்து கணக்கில் வராத இலஞ்சப்பணம் ரூ.1,378/- கைப்பற்றப்பட்டது, உதவியாளர் திரு.பழனி அவர்களிடமிருந்து கணக்கில் வராத இலஞ்சப்பணம் ரூ.831/- கைப்பற்றப்பட்டது, இளநிலை உதவியாளர் திரு.மதுசூதனன் அவர்களிடமிருந்து கணக்கில் வராத இலஞ்சப்பணம் ரூ.1,410/- கைப்பற்றப்பட்டது மற்றும் தற்காலிக தகவல் தொகுப்பு பணியாளர் திரு.விஜயன் அவர்களிடமிருந்து கணக்கில் வராத பணம் ரூ.630/- கைப்பற்றப்பட்டது. எனவே ஆவணங்களை பதிவு செய்ய வந்த நபர்களிடம் கேட்டு பெற்ற இலஞ்சப்பணம் ரூ.4,249/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கிறேன், மேற்கொண்டு வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். Sd(xxxxx) திரு.S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

Sir, Received the complaint and the enclosures and registered a case in Tiruvannamalai Vigilance and Anti Corruption Crime No 01/2018 u/s 7 and 13(2) r/w 13(1)(d) of PC Act 1988 on 13.02.2018 at 1600 Hrs. Sd(xxxx) V.SARAVANAKUMAR, Deputy Superintendent of Police, Vigilance and Anti Corruption, Tiruvannamalai.

Original FIR along with the original typed complaint of Tr.S.Jothi, Dy.Inspection Cell officer, Vellore & Tiruvannamalai Districts is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Court, Tiruvannamalai and a copy of FIR submitted to the Director,V&AC, Chennai-16.

13/02/2018

*Deputy Superintendent of Police*
Vigilance & Anti Corruption
Thiruvannamalai Dist.